**Press Release**

# National Business Excellence Awards 2019 நிகழ்வில் விருதை வெல்லும் Bharti Airtel Lanka

16ஆவது தேசிய வர்த்தக சிறப்பு விருதுகள் 2019 (National Business Excellence Awards 2019) நிகழ்வில் 'பிற சேவைகள் / பிற துறைகள்' பிரிவில் இரண்டாவது இடத்திற்கான விருதினைப் பெற்ற ஒரே தொலைத்தொடர்பு சேவை என்ற அங்கீகாரத்தைப் Airtel Lanka தனதாக்கியுள்ளது.

அண்மைக்காலமாக அதிகமான விருதுகளைப் பெற்ற நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட Airtel Lanka கடந்த காலங்களில் மேலும் பல விருதுகளை வென்றுள்ளது. 'Great Place to Work நிறுவனத்தினால் இலங்கையில் 'முன்னணியிலுள்ள 25 சிறந்த பணியிடங்கள்' என்ற மதிப்பு மிக்க விருதினை வென்றுள்ளதுடன், இலங்கையில் 'பெண்களுக்கான சிறந்த 10 பணியிடங்கள்' என்ற விருதினையும் பெற்றுள்ளது. அதேசமயம், World HRD Congress நிறுவனத்தினால் நடத்தப்பட்டது. CMO விருது வழங்கும் நிகழ்வில் 'Best Brand', Best Employer Brand' மற்றும் 'Best Innovation for Retention Strategy' விருதுகளையும் Airtel பெற்றது. Colombo Leadership Academy உடன் இணைந்து People Business India வழங்கும் 3 தனி நபர்களுக்கான விருதுகளான 'Company with Great Manager' விருதினையும் Airtel பெற்றது. Sri Lanka Institute of Marketing இனால் ஏற்பாடு செய்யப்பட்ட SLIM NASCO விருது வழங்கும் நிகழ்வில் தொலைத்தொடர்பு பிரிவில் விற்பனை நிறைவேற்று அதிகாரி / தொலைத்தொடர்பு மற்றும் பிராந்திய மேற்பார்வையாளர் பிரிவுகளில் முறையே தங்கம் மற்றும் வெண்கல விருதுகளையும் Airtel வென்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த அங்கீகாரமானது Airtelஇன் தொடர்ச்சியான முதலீட்டினை உருவாக்குவதற்கும் அதன் பணியாளர்களுக்கு சிறந்த தொழில் அனுபவத்தை உருவாக்குவதற்குமான செயற்பாட்டிற்கு கிடைத்த மிகப்பெரிய பலனாகும். அவ்வாறே தொலைத்தொடர்பு துறையில் வேலை வழங்குநராக நிறுவனத்தின் வெற்றியை பிரதிபலிப்பதுடன் விசேட தொழில் அனுபவத்தையும் வழங்கும் வகையில் அமைவதோடு வர்த்தகத்தின் முக்கியத்வத்தையும் இது சுட்டிக்காட்டும்.

விருப்பமான ஒரு முதலாளியாக அமைப்பின் வெற்றியை பிரதிபலிக்கும் விதிவிலக்கான வேலைவாய்ப்பு அனுபவத்தை வழங்கும் அதேவேளை வர்த்தக சிறப்பையும் இது சுட்டிக்காட்டுகிறது.

இலங்கையின் முன்னோடி விருது வழங்கும் நிகழ்வில் NBEAயும் ஒன்றாகும், இது இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் 2004ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது மட்டுமன்றி, இணையற்ற பெரு நிறுவன சிறப்பின் நற்பெயரை பேணி, இலங்கையின் மிகச்சிறந்த வர்த்தகங்களுக்கான சிறப்பின் அடையாளமாக அதிக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

இடமிருந்து: லக்மால் ரனசிங்க (பைனான்ஸ்), ருமல் வர்ணகுலசூரிய (சந்தைப்படுத்தல்), குஷானி அம்பவத்த (வாடிக்கையாளர் அனுபவம்), சுரங்கி ராஜபக்ஷ (பிரதம நிறைவேற்று அதிகாரி அலுவலகம்), கனிஷ்க ரனவீர (தலைமை மனித வளம்), ஜினேஷ் ஹெஜ் (பிரதம நிறைவேற்று அதிகாரி / முகாமைத்துவ பணிப்பாளர்), சுரேனி தயாரத்ன விஜேசிங்க (மனித வளம்), சஹாரா ராஜகுரு (மனித வளம்), சாவினி பன்டிகோரல (ஃபினான்ஸ்), ஷஃபியா கரீம் (சந்தைப்படுத்தல்), துமிந்து திலக்கரத்ன (நெட்வேர்க்), சுஹைப் பிஷ்ருல் (விற்பனை) இஷான் மல்வத்தகே (விற்பனை)